மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

2021 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 10ம் நாள் புதன் கிழமை

1873ம் ஆண்டு 11ஆவது ஏற்பாட்டின்படி திருமதி.வி.லட்சுமி, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

OS.No. 270/2014 வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | .. சிவா | வயது | .. 40 |
| த/பெ. | .. காசி | சாதி | .. |

10.03.2021 - வா.சா.1 குறுக்கு விசாரணை.

இந்த வழக்கை கொம்மனந்தல் கிராமத்திலிருந்து கரைப்பூண்டி கிராமத்திற்கு கேபிள் டிவி இணைப்பு வருவதற்காக தாக்கல் செய்துள்ளேன். நான் எதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் கொம்மனந்தல் கிராமத்தில் நான் கேபிள் டிவி போட்டிருந்தேன், அதனை பிரதிவாதி துண்டித்து விட்டு அவரது இணைப்பு வழங்கியுள்ளார். அதனால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது இணைப்பை 2014ம் வருடம் துண்டித்து விட்டார்கள். தற்போது எனது கேபிள் டிவி இணைப்பு அந்த கிராமத்தில் உள்ளது. என்னுடைய கேபிள் டிவி துண்டிப்பு சம்பந்தமாக 1, 2 பிரதிவாதிகள் மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் புகார் கொடுத்தேன். அந்த புகாருக்குண்டான சிஎஸ்ஆரோ அல்லது வேறு ஆவணமோ இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கேபிள் இணைப்பை வழக்கு தாக்கல் செய்வதற்கு ஒரு மாதத்திற்கு முன்பாக துண்டித்து விட்டார்கள். நான் 1998ல் இருந்து கேபிள் டிவி இணைப்பு வழங்கும் வேலையை செய்து வருகிறேன். 2011ல் கேபிள் டிவி இணைப்பு அரசு கேபிள் இணைப்பாக மாற்றப்பட்டது. கேபிள் டிவி அரசு மயமாக்கப்படுவதற்கு முன்பாக நான் 1ம் பிரதிவாதி கட்டுப்பாட்டு அறையில் இருந்து தான் இணைப்பை பெற்று கரைப்பூண்டி கிராமத்திற்கு இணைப்பு கொடுத்து வந்திருந்தேன் என்றால் சரிதான். அரசு மயமாக்குவதற்கு முன்பாக கேபிள் டிவி இணைப்பு வழங்கும் தொழிலில்

ஒரு இடத்தில் ஒரு நபர் இணைப்பு வழங்கி கொண்டிருக்கும்போது அதே இடத்தில் வேறு ஒரு நபர் இணைப்பு வழங்குவதில்லை. கேபிள் டிவி தொழில் செய்வதற்கு மத்திய அரசிடமிருந்து உரிமம் பெற்றிருக்க வேண்டும் என்றால் சரிதான். அந்த உரிமம் ஆனது அஞ்சலக துறை மூலமாகத்தான் வழங்கப்படுகிறது. அந்த உரிமத்தில் எந்த ஊரில் தொழில் செய்ய வேண்டும் என்பதை குறிப்பிட்டுத்தான் கொடுக்கிறார்கள் என்றால் சரிதான். மேற்படி உரிமத்தின் அடிப்படையில் தான் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தார் எல்.சி.ஓ. ஆக நியமனம் செய்யப்பட்டு அவர்கள் மூலம்கேபிள் டிவி இணைப்பு வழங்கப்படுகிறது என்றால் சரிதான். கொம்மனந்தல் மற்றும் கரைப்பூண்டி இரண்டு கிராமங்களும் வெவ்வேறு வருவாய் கிராமம் என்றால் சரியல்ல. இரண்டும் ஒரே வருவாய் கிராமம் என்பதற்கு எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்திருக்கும் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 உரிமமானது கரைப்பூண்டி கிராமத்திற்கு வழங்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.2ன் படியான உரிமத்தின் படி வா.சா.ஆ.1ன்படி நான் கரைப்பூண்டி கிராமத்திற்கு எல்.சி.ஓ. ஆன நியமிக்கபட்டிருக்கிறேன் என்றால் சரிதான். ஒரு பஞ்சாயத்திற்கு ஒரு எல்.சி.ஓ. தான் கொடுப்பார்கள் என்ற காரணத்தினால் தான் வா.சா.ஆ.1ன் கரைப்பூண்டி கிராமம் பெயர் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் கூறுவது தவறு என்றாலும் நான் தாக்கல் செய்திருக்கும் வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆகிய இரு ஆவணங்களும் கரைப்பூண்டி கிராமத்திற்கு மட்டுமானது தான் அது கொம்மனந்தல் கிராமத்திற்கு சம்பந்தப்பட்டது அல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தில் அரசு கேபிள் நிறுவனத்திற்கு நான் ரூ.20,447/- பாக்கி உள்ளது என்று அறிவிப்பு எனக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதிலும் கரைப்பூண்டி கிராமம் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் கீழே அடைப்பு குறிக்குள் கொம்மனந்தல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிவிப்பிற்குண்டான பாக்கி தொகையை இன்றுவரை நான் செலுத்தவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1ல் எந்தெந்த ஊர்களுக்கு கேபிள் டிவி தொழில் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டுத்தான் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1ல் கொம்மனந்தல்

கிராமத்தின் பெயர் இடம் பெறவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 முதல் வா.சா.ஆ.21 வரையிலான ஆவணங்களே என்னுடைய எல்.சி.ஓ., எண்ணை குறிப்பிட்டுத்தான் பணம் செலுத்தியுள்ளேன் என்றால் சரிதான். அந்த எண் வா.சா.ஆ.1ல் குறிப்பிடப்பட்டுள்ள எல்.சி.ஓ.46657 என்றால் சரிதான். வழக்கு போடும் காலத்தில் நான் கரைப்பூண்டி கிராமத்திற்கு மட்டும் தான் எல்.சி.ஓ. ஆக நியமிக்கப்பட்டிருந்தேன் என்றால் சரிதான். உரிமமும் கரைப்பூண்டி கிராமத்திற்கு மட்டும் தான் கொடுக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். கொம்மனந்தல் கிராமத்தில் 1ம் பிரதிவாதி கேபிள் டிவி தொழில் செய்து வருகிறார் என்றால் இல்லை. எல்.சி.ஓ.வை தனி வட்டாட்சியர் தான் வழங்குகிறார் என்றால் சரிதான். இந்த வழக்கில் 3ம் பிரதிவாதி அவர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் கொம்மனந்தல் கிராமத்திற்கு 1 மற்றும் 2 பிரதிவாதிகள் பெயரில் தான் எல்.சி.ஓ. வழங்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது தவறானது. 1ம் பிரதிவாதி சேத்துப்பட்டு கட்டுப்பாட்டு அறையில் இருந்து கொம்மனந்தல் கிராமத்திற்கு தனியாக ஒயர் இழுத்து அந்த கிராமத்தில் கேபிள் டிவி இணைப்பு கொடுத்து வருகிறார் என்றால் சரியல்ல. கொம்மனந்தல் கிராமத்திற்கு கொடுக்கவில்லை. வேறு 10 கிராமங்களுக்கு இணைப்பு கொடுத்துள்ளார். 1ம் பிரதிவாதி கொம்மனந்தல் கிராமம் வழியா கேபிள் டிவி இணைப்பை எந்தெந்த கிராமங்களுக்கு எடுத்துச் செல்கிறார் என்றால் சோத்துக்கன்னி, விளாப்பாக்கம், பெலாசூர், கொழவூர், இன்னும் சில கிராமங்களுக்கு எடுத்துச்செல்கிறார். கரைப்பூண்டி கிராமத்தில் எனது ஆப்ட்டிகல் ஒயரில் 1ம் பிரதிவாதி எந்த விதமான இணைப்பும் செய்யவில்லை என்றாலும் எனது இணைப்பில் எந்தவிதமான தொந்தரவும் செய்யவில்லை என்றாலும் சரிதான். போளூர் கட்டுப்பாட்டு அறையில் இருந்து நான் கரைப்பூண்டி கிராமத்திற்கு எடுத்துச்செல்லும் கேபிள் ஆப்டிக்கல் ஒயிரிலிருந்து எந்த இணைப்பும் எடுக்க முயற்சி செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த பின்பு வழக்கு நிலுவையில் இருக்கும்போது 2020ம் ஆண்டு வா.சா.ஆ.22 ஐ நான் வாங்கியிருக்கிறேன் என்றால் சரிதான். எனவே, வழக்கு நிலுவையில் இருக்கும்போது வாங்கப்பட்ட ஆவணம் என்பதால் அது ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.22

ஆனது 23.08.2020 முதல் 22.08.2021 வரையிலான காலத்திற்கு எனக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.22ல் தான் கொம்மனந்தல் கிராமம் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.22ல் கொம்மனந்தல் கிராமம், கரைப்பூண்டி கிராமம் என்று தனித்தனியாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் பத்தி 3ல் "வாதி கொம்மனந்தல் கிராமத்தில் தொழில் செய்து வருகிறார் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர கரைப்பூண்டி பஞ்சாயத்திற்குட்பட்ட அல்லது கரைப்பூண்டி மதுராவிற்குட்பட்ட கொம்மனந்தல் கிராமத்தில்" என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். செட்அப் பாக்ஸ் எப்போது கொடுத்தார்கள் என்றால் 2018. கொம்மனந்தல் கிராமத்திற்கு மட்டும் 80 செட்அப் பாக்ஸ் தனி வட்டாட்சியர் அவர்களால் எனது மூலம் கேபிள் இணைப்பு வழங்க கொடுக்கப்பட்டிருக்கிறது. கொம்மனந்தல் கிராமத்திற்காக எனக்கு செட்அப் பாக்ஸ் எதுவும் கொடுக்கப்படவில்லை என்றாலும் நான் பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் முறைகேடு செய்து அரசு கேபிள் நிறுவனத்திற்கு ரூ.2.5 கோடி வரை இழப்பீடு ஏற்படுத்தி உள்ளார்கள் என எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எந்த அடிப்படையில் நான் அவ்வாறு கூறுகிறேன் என்றால் செய்தி தாளில் வந்த செய்தியின் அடிப்படையில் கூறுகிறேன். அந்த செய்தி தாளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். என்னிடம் காட்டப்படும் இவ்வழக்கு சம்பந்தமான நீதிமன்ற வழக்கு கோப்பில் அது இருக்கிறதா என்றால் இல்லை. நான் அவ்வாறு ஆவணம் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கொம்மனந்தல் கிராமத்திற்கு 1, 2 பிரதிவாதிகள் தான் எல்.சி.ஓ. ஆக கேபிள் இணைப்பு வழங்கி வந்தார்கள், இந்நிலையில் 2014ம் ஆண்டு நான் அவர்களிடம் கேபிள் இணைப்பு சம்பந்தமாக தகராறு செய்ததால் என்மீது அவர்கள் புகார் கொடுத்தார்கள் என்றால் சரிதான். அந்த புகாரின் பேரில் விசாரணையில் இனிமேல் அவர்களிடம் தகராறு செய்மாட்டேன் என்று

எழுதிக்கொடுத்துவிட்டு வந்தேன் என்றால் சரியல்ல. கொம்மனந்தல் கிராமத்திற்கு நான் எல்.சி.ஓ. இல்லை என்றாலும் பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

(Sd)/-D.Ravi,
District Munsif,
Polur.